**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.214/2025**

**நாள் : 27.03.2026**

**ம.சா. 1 ஜெயமாலினி**

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

**மனுவில் எனது கணவர் லாரி மெக்கானிக்காக பணிபுரிந்து வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் JMS பஸ் ஓனரிடம் பஸ் கம்பெனியில் வேலை பார்த்ததாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு JMS பஸ் கம்பெனியில் வேலை செய்ததற்கான ஆதாரமோ அல்லது சம்பள பட்டியலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் எனது கணவர் மாதம் ரூ.20,000/- சம்பாதித்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொலகிறேன் என்றால் சரியல்ல. TN 83 U 9376 என்ற இருசக்கர வாகனத்தை எனது கணவர் ஓட்டிச் சென்றபோதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனது கணவருக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் விபத்து சமயத்தில் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அவர் இறக்கும்போது அவருக்கு வயது 40. எனது கணவருக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் காப்பீடு இல்லாத நிலையிலும்தான் வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்றால் சரியல்ல. என் கணவருக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விவரமானது மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனவே எனது கணவரின் இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன அலுவலகத்திலிருந்து உடனிருந்தவர்கள்தான் அபராதம் செலுத்திதான் எடுத்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் 10ஆம் வகுப்பு படித்துள்ளேன். விபத்து தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரிதான். அந்த சாலை 6 வழிச்சாலை என்றால் சரிதான். அதில் இரண்டுபக்கமும் சர்வீஸ் ரோடு உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் என் கணவரை**

மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது வீட்டுக்கு அடுத்த பஸ்டாப்பில்தான் விபத்து நடந்தது. வாணியம்பாடி-ஆம்பூர் சாலையானது வடக்கு தெற்கு சாலை என்றால் சரிதான். எனது ஊரான விண்ணமங்கலத்தில் ரோட்டிற்கு மேற்குபுறத்தில் உள்ளது. விபத்து நடந்த இடத்தை பார்த்தேனா என்றால் ஆமாம். ஆனால் நான் சென்றபோது அங்கு யாரும் இல்லை. வாணியம்பாடியிலிருந்து ஆம்பூர் செல்வதற்கு தனித்தனியாக தடுப்பு சுவர் உள்ளது என்றால் சரிதான். விபத்தானது தடுப்பு சவருக்கு அருகில் நடநத்து என்றால் சரிதான். விபத்து 19.11.2022 அன்று இரவு 10.30 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். மறுநாள் காலைதான் காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். நான்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் கண்டுள்ளபடி நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அன்றையதினம் காலை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டேனா என்றால் இல்லை. நான்தான் எழுத்துபூர்வமான புகார் மனுவை ஆம்பூர் கிராமிய காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்த விதத்தை குறிப்பிட்டுதான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டதற்கு பின்னிட்டுதான் விபத்து நடந்த விதம் தவறானது என்று அறிந்து எஸ் பி அலுவலகத்தில் புகார் கொடுத்ததாக சாடசி கூறுகிறார். JMS பஸ் கம்பெனியானது விண்ணமங்கலத்தில் உள்ளது. என் கணவர் வீட்டை விட்டு இரவு 8.30 மணிக்கு ஆம்பூர் சென்றதாக புகாரில் உள்ள விவரம் தவறானதாகும். எனது கணவர் தவறுதலாக வாணியம்பாடி நோக்கி செல்லும் பாதையில் வந்து லாரியின்மீது மோதி தன்னிச்சையாக விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் ஆம்பூரிலிருந்து வாணியம்பாடி நோக்கி சரியான பாதையில சென்றதாக சாட்சி கூறுகிறார். லாரி சென்ற பாதையானது ஆம்பூரை நோக்கி செல்லும் பாதை என்றும், அது வாணிம்பாடி நோக்கி செல்லும் பாதை இல்லை என்றால் சரியல்ல. லாரியானது மிதமான வேகத்தில் சரியான பாதையில் சென்றது என்றும், எனது கணவர்தான்

ஓட்டுவதற்கு பயிற்சி இல்லாமல் சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது கணவரின் கவனமின்மையும் தவறான பாதையில் பயணித்ததும் காரணம் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு தலை நசுங்கி, வாய், காது மூக்கு ஆகிய இடங்களில் ரத்தம் வடிந்து இறந்துபோனதாக பிரேத கூராய்வு அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் ஹெல்மெட் அணிந்துதான் போனார். எனது கணவர் ஹெல்மெட் அணிந்து சென்றிருந்தால் தலைக்காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்து எனது கணவரின் கவனக்குறைபுதான் விபத்திற்கு காரணம் என்று வழக்கு பதிவு செய்து இறந்துபோன நிலையில் charge abate என்று குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்து பற்றி அறிந்ததற்கு பின்னிட்டு 01.12.2022 அன்று எஸ் பி அலுவலகத்திற்கு விபத்து நடந்த விதம் பற்றி வேறுவிதமாக ஒரு புகார் மனுவை அனுபபிவைத்தேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.15 கடிதமானது வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனது கணவரின் இருசக்கர வாகனத்திற்கு முன்புறம்தான் சேதாரம் ஏற்பட்டுள்ளதாக மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அதேபோல் இருசக்கர வாகனத்தின் பின்புறத்தில் சேதாரம் ஏற்படடதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. லாரி வந்து பின்புறமாக மோதியதால் வளைவுபகுதியாக இருந்ததால் வாகனத்தின் முன்புறம் சேதாரம் ஏற்பட்டதாக சாட்சி கூறுகிறார். விபத்து நடந்த விதம் பற்றி மாதிரி வரைபடத்திலேயே பேரிகார்டு ஓரமாக சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. ஆதார் ஆவணத்தின்படி விபத்து சமயத்தில் என் கணவருக்கு 42 என்றால் சரிதான். விபத்திற்கு என் கணவர்தான் காரணம் என்பதால் எதிரமனுதாரர்கள் எவ்வித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. நான்

பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.